32950

OL/2025(2026)/43-T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

43 T I

| வினாத்தாள் | புள்ளிகள் |
| --- | --- |
| I | |

| | |
| --- | --- |
| பரீட்சகர் 1 | |
| பரீட்சகர் 2 | |
| EMF | |

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

චිත්‍ර I
சித்திரம் I
Art I

පැය එකයි
ஒரு மணித்தியாலம்
One hour

● எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக. சுட்டெண் : ........................................

● பின்வரும் ஒளிப்படத்தைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 5 வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.



1. இக் கட்டடக்கலை நிர்மாணிப்பு ........................................ காலத்துக்குரியதாகும்.
2. இது ........................................ விகாரை வளாகத்தில் அமைந்துள்ளது.
3. இச் சிறப்பான கட்டடக்கலை நிர்மாணிப்பு ........................................ எனும் பெயரால் அழைக்கப்படுகிறது.
4. இதன் தரைத்தளத்தில் நான்கு திசைகளையும் நோக்கியவாறு எட்டு ........................................ செதுக்கப்பட்டுள்ளன.
5. இரண்டு மாடிகளைக் கொண்ட இதன் தரைத்தளத்தில் நான்கு திசைகளையும் நோக்கியவாறு நான்கு ........................................ அமைக்கப்பட்டுள்ளன.

● 6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

6. கண்டி தலதா மாளிகையில் தேவேந்திர மூலாச்சாரியார் என்ற கலைஞரால் நிர்மாணிக்கப்பட்டுள்ள தனித்துவமான கட்டட நிர்மாண அங்கம் யாது?

........................................................................................................................

7. பேராசிரியர் செனரத் பரணவிதானவினால் சிகிரியா என்ன பெயரால் அழைக்கப்பட்டது?

........................................................................................................................

8. கேலிச்சித்திரக் கலைஞர் டபிள்யூ. ஆர். விஜேசோமவால் படைக்கப்பட்ட மிகவும் பிரபல்யமான கேலிச்சித்திர பாத்திரம் யாது?

........................................................................................................................

[பக் 2 ஐப் பார்க்க

**9.** நடராஜர் வடிவத்தில் வாமனனை மிதித்துக் கொண்டிருக்கும் பாதம் எதனைக் குறிக்கின்றது?

..........................................................................................................................

**10.** பொலன்னறுவை கல்விகாரை புத்தர் சிலைகளின் காவி அங்கிகளில் காணப்படும் விசேட பண்பு யாது?

..........................................................................................................................

- **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து **அதன்கீழ் கோடிடுக.**

**11.** அநுராதபுர மகாமேகவனப் பூங்காவில் அமைந்துள்ள சமாதி புத்தர் சிலை,
   (1) தியான நிலையில் அமர்ந்திருந்திருக்கும் சந்தர்ப்பத்தைச் சித்திரிக்கின்றது.
   (2) வீராசனமுறையிலும் தியான முத்திரையுடனும் செதுக்கப்பட்டதாகும்.
   (3) ஒரு பக்கமாகச் செதுக்கப்பட்ட காவி அங்கியைக் கொண்டுள்ளது.
   (4) இந்திய கலைப் பண்புகளைச் சித்திரிக்கின்றது.

**12.** கம்பளைக் கால லங்காதிலக்க விகாரையின் புத்தர் சிலை நிர்மாணிப்பின்போது கலைஞர் மிகவும் முயன்றிருப்பது,
   (1) வீராசனமுறை மற்றும் தியான முத்திரையுடனான சித்திரிப்பிற்காகும்.
   (2) கிரீடத்தின் மீது தலையாபரணத்தை நிர்மாணிப்பதற்காகும்.
   (3) ஆன்மிகக் குணங்களின் தொகுப்பை விட வெளிவாரிப் பண்புகளைக் காட்டுவதற்காகும்.
   (4) பூ வேலைப்பாடுகள் நிறைந்த மகரதோரண நிர்மாணிப்பிற்காகும்.

**13.** இந்திய அஜந்தா ஓவியங்களில் காணத்தக்க தனித்துவமான பண்பு
   (1) தயாரிக்கப்பட்ட சாந்தின் மீது ஓவியம் வரையப்பட்டிருத்தலாகும்.
   (2) ஜாதகக் கதைகளையும் புத்தரது வாழ்க்கை வரலாற்றையும் மட்டும் கருப்பொருளாகக் கொண்டிருத்தலாகும்.
   (3) சிகிரியாவிலுள்ள தேவதைகளின் உருவங்களை ஒத்ததாக வரையப்பட்டிருத்தலாகும்.
   (4) கருப்பொருள்களைக் கூர்மைப்படுத்துவதற்கு இருண்ட மற்றும் பிரகாசமான வர்ணங்களைப் பயன்படுத்தியிருத்தலாகும்.

**14.** ஹென்றி மூவரின் சாய்ந்திருக்கும் பெண் எனும் சிற்பத்தின் சிறப்பம்சம்
   (1) சிற்ப நிர்மாணிப்புக் கோட்பாடுகளைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட பூங்கா சிலையாகக் காணப்படுகின்றமை
   (2) நீளமான வடிவங்கள் சந்தங்களுக்கேற்ப பயன்படுத்தப்பட்ட சிலையாக அமைந்துள்ளமை
   (3) இயற்கையாக அல்லாது நிர்மாணிக்கப்பட்ட சிலையாகக் காணப்படுகின்றமை
   (4) மனித உடலின் அடிப்படை உருவத்தை அரூப ரீதியாகப் பயன்படுத்தி படைக்கப்பட்ட பூங்கா சிலையாகக் காணப்படுகின்றமை

**15.** பொலன்னறுவை 2 ஆம் இலக்க சிவாலயம்
   (1) தென்னிந்திய கட்டடக்கலைப் பண்புகளுக்கமைய நிர்மாணிக்கப்பட்டதாகும்.
   (2) கி.பி 13 ஆம் நூற்றாண்டில் இந்திய கட்டடக்கலைப் பண்புகளுக்கமைய நிர்மாணிக்கப்பட்டதாகும்.
   (3) பொலன்னறுவையில் முதன்முதலாக நிர்மாணிக்கப்பட்ட இந்துக் கோயிலாகும்.
   (4) கி.பி 10 ஆம் நூற்றாண்டில் சோழக் கட்டடக்கலைப் பண்புகளுக்கமைய நிர்மாணிக்கப்பட்டதாகும்.

- **16** தொடக்கம் **20** வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லினதும் கருத்தை விளக்கும் வகையில் முழுமையான ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

**16.** ஹர்மிகா : ..........................................................................................

..........................................................................................

**17.** கோபுரம் : ..........................................................................................

..........................................................................................

**18.** டெம்பரா : ..........................................................................................

..........................................................................................

**19.** கியரஸ்கியுரோ : ..........................................................................................

..........................................................................................


**20.** தூரநோக்கு : ..........................................................................................

..........................................................................................

[பக் 3 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

- **21** தொடக்கம் **25** வரையில் தரப்பட்டுள்ள ஒளிப்படப் பகுதிகளுடனான நெருங்கிய தொடர்பைக் கொண்ட உருவை, எதிரிலுள்ள **A, B, C, D, E** ஆகிய உருக்களிலிருந்து தெரிவுசெய்து, அதனைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தினைப் **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

**21.**  (.........)  **A**

**22.**  (.........)  **B**

**23.**  (.........)  **C**

**24.**  (.........)  **D**

**25.**  (.........)  **E**

- **26** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான **சொல்லை / சொற்களை** இட்டு வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

**26.** இயேசுநாதர் தனது பன்னிரண்டு சீடர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம் ......................................................... ஓவியம் மூலம் சித்திரிக்கப்படுகிறது.

**27.** சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட பசுபதி முத்திரை சிவனின் மாதிரி என தொல்பொருள் அறிஞர் ......................................................... குறிப்பிடுகின்றார்.

**28.** நகவேலைப்பாடுகள் மற்றும் பட்டறை வேலைப்பாடுகள் ஆகிய நுட்பமுறைகள் ......................................................... கலைக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும்.

**29.** மைக்கல் ஆஞ்சலோவினால் சிஸ்டைன் தேவாலயத்தின் பலிபீடத்தின் பின்புறச் சுவரில் வரையப்பட்ட ......................................... ஓவியம் உன்னதமானதொரு படைப்பாகும்.

**30.** புத்த பகவான் தௌதிச தேவலோகத்திற்குச் சென்று, அறத்தைப் போதித்த பின்னர் திரும்பி வருவதனை எடுத்துக்காட்டும் ஓவியம் ......................................... எனப்படும்.


● **31** தொடக்கம் **35** வரையுள்ள வினாக்களிலுள்ள இடைவெளிகளை **F, G, H, I, J** ஆகிய ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்டு நிரப்புக.


F


G


H


I


J

**31.** **F** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள தாமரைச் செடியின் வடிவத்தையுடைய, தூண்களுடனான மண்டபம் எப்பெயரினால் அழைக்கப்படும்?

..........................................................................................................................

**32.** **G** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள செதுக்கலை நிர்மாணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட நுட்பமுறை யாது?

..........................................................................................................................

**33.** **H** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இப் பெண் உருவம் எப்பெயரால் அழைக்கப்படும்?

..........................................................................................................................

**34.** **I** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள, ஓவியர் ஏ. மார்க்கினால் வரையப்பட்ட 'சகுந்தலா' ஓவியம் ஐரோப்பாவின் எக் கலைப்பாங்கின் செல்வாக்கிற்கு உட்பட்டுள்ளது?

..........................................................................................................................

**35.** **J** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பன்குலிய சிலையினால் எக் கலைப் பண்பு வெளிப்படுத்தப்படுகிறது?

..........................................................................................................................

● உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வர்ண ஓவியத்தை அடிப்படையாகக் கொண்டு, அதிலுள்ள தகவல்களையும் கலைப் பண்புகளையும் பகுப்பாய்வு செய்யும் விதத்தில் **36** தொடக்கம் **40** வரையில் தரப்பட்டுள்ள உப தலைப்புகளுக்கமைவாக பொருளுள்ள **ஐந்து** வாக்கியங்கள் எழுதுக. (விபரமான வாக்கியங்களாக விடைகளை எழுதுவது கட்டாயமானதாகும். அவ்வாறல்லாத விடைகளுக்குப் புள்ளிகள் **வழங்கப்படமாட்டாது.**)

**36.** கலைஞர் : ..........................................................................................

..........................................................................................

**37.** கருப்பொருள் : ..........................................................................................

..........................................................................................

**38.** ஒழுங்கமைப்பு : ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**39.** கோட்பாட்டுப் பயன்பாடு : ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**40.** உணர்வு வெளிப்பாடு : ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

* * *

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**43 T II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)**

| | |
|---|---|
| චිත්‍ර | II |
| சித்திரம் | II |
| Art | II |

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

✳ உங்கள் **சுட்டெண்ணை** விடைத்தாளில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தெளிவாக எழுதுக.

✳ விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும்போது திரவ ஊடகம் பயன்படுத்தப்பட்ட சித்திரங்கள் நன்றாக உலர்ந்திருத்தல் வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளுதல் உங்களுக்குப் பாதகமாக அமையலாம்.

✳ நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், கெட்டிச்சாயம் (டெம்பரா), பஸ்ரல் வர்ணம் அல்லது கையில் ஒட்டிக் கொள்ளாத எந்தவொரு வர்ண ஊடகத்தையும் பயன்படுத்தலாம்.

✳ பொருட்களின் தொகுதியை சுமார் 73 cm உயரமுள்ள தட்டையான மேசையின் மீது வைக்குமாறு மேற்பார்வையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

**சுயாதீன ரேகைச் சித்திரமும் வர்ணச் சித்திர ஒழுங்கமைப்பும்**

✳ உங்களுக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருட்கூட்டத்தை நன்றாக அவதானிக்குக.

1. பூர்வாங்க பரும்படிப் படத்தை முதலில் வரைக. இதற்காக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வெள்ளைநிற A4 அளவிலான பருமட்டத் தாளைப் பயன்படுத்துக.
2. பொருட்கூட்டம் உங்களுக்குக் காட்சியளிக்கும் விதத்தில் வரைந்து வர்ணந்தீட்டுக. இதற்காக வழங்கப்பட்டுள்ள விசேட வரைதல் தாளைப் பயன்படுத்துக.

✳ **மேலே 1, 2 இலுள்ள இரண்டு வரைதல்களையும் ஒன்றாக இணைத்து பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்குக.**

✳ உங்களது வரைதலை மதிப்பிடும்போது பின்வரும் விடயங்கள் கருத்திற் கொள்ளப்படும் என்பதைக் கவனத்திற் கொள்க.

● **சுயாதீன ரேகைக் கற்றல்**

1. பருமட்டத் தாளில் பூர்வாங்கப் பரும்படிப் படம் தொடர்பில் வெளிப்படுத்தியுள்ள திறன்கள் *(05 புள்ளிகள்)*

● **வர்ணச் சித்திரம்**

2. பொருட்கூட்டத்தை தளத்தின் மீது அர்த்தமுள்ள வகையில் ஒழுங்குபடுத்தும் ஆற்றல் *(05 புள்ளிகள்)*
3. பொருட்களின் அளவிடைகள் மற்றும் தன்மையை வெளிப்படுத்தும் ஆற்றல் *(05 புள்ளிகள்)*
4. கோட்பாடுகளின் பயன்பாடு தொடர்பான விளக்கம் *(05 புள்ளிகள்)*
   (தூரநோக்கு, முப்பரிமாண இயல்பு, கண்மட்டம், வெளியைப் பயன்படுத்தல்)
5. வர்ணப் பயன்பாடும் பண்புகளைக் காட்டுதலும் *(05 புள்ளிகள்)*
6. சித்திரத்தின் பின்னணி உள்ளிட்ட ஒட்டுமொத்த பூரணத்துவம் *(05 புள்ளிகள்)*

**மிக முக்கியம் :**

பொருட்கூட்டம் வைக்கப்பட்டுள்ள பலகையை முழுமையாக வரையத் தேவையில்லை. பலகையின் அளவைப் பொருட்கூட்டத்துக்குப் பொருந்தும் வகையில் மாற்றி வரைவதற்கு உங்களுக்கு அனுமதி உண்டு.

✳✳✳

Past Papers Wiki

OL/2025(2026)/43-T-III

32562

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

43 T III

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

චිත්‍ර III
சித்திரம் III
Art III

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ நீங்கள் ஒரு வர்ணச் சித்திரத்தை மாத்திரமே வரைய வேண்டும்.
- ✳ உங்கள் **சுட்டெண்ணையும்** உரிய **வினா இலக்கத்தையும்** விடைத்தாளில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தெளிவாக எழுதுக.
- ✳ விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும்போது, உங்களது சித்திரம் நன்றாக உலர்ந்திருக்க வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளுதல் உங்களுக்குப் பாதகமாக அமையலாம்.
- ✳ வர்ணந் தீட்டுவதற்கு நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், பெஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக் கொள்ளாத எவ்வகை வர்ண ஊடகத்தையும் பயன்படுத்தலாம்.
- ✳ வரைவதற்கு விசேட வரைதற் தாளும் A4 அளவிலான மேலதிக தாளும் திசுத்தாளும் வழங்கப்படும்.

பகுதிகள் **'அ', 'ஆ', 'இ'** ஆகியவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியிலிருந்து **ஒரு வினாவை மாத்திரம்** தெரிவுசெய்க.

## பகுதி 'அ' - சித்திர ஒழுங்கமைப்பு

1. விழாக் காலத்தில் மக்கள் நிறைந்து காணப்படும் நடைபாதை வர்த்தக நிலையங்கள்
2. சுற்றுலாவின்போது நீராடி மகிழும் சிலர்
3. ஆபத்து நேரப்போவதை உணர்ந்த மான் கூட்டமொன்று
4. அறுவடையில் ஈடுபட்டிருக்கும் ஆண், பெண் விவசாயிகள்

## பகுதி 'ஆ' - அலங்கார ஆக்கம்

5. கேத்திரகணித வடிவங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட அலங்கார அலகுகளைப் பயன்படுத்தி 9" × 9" அங்குல அளவிலான **பரவல் அலங்காரமொன்றை** வரைந்து நிறந்தீட்டுக.
6. விலங்குகள், மரம் செடி கொடிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி 10' × 6' அடி அளவிலான **சுவர் அலங்காரமொன்றைத்** திட்டமிட்டு நிறந்தீட்டுக. (தாளுக்குப் பொருந்தும் வகையில் அளவிடைக்கு வரைக.)
7. சுற்றுலா விடுதியொன்றின் விறாந்தையில் தொங்கவிடுவதற்குப் பொருத்தமான **பதாகையொன்றை,** மரபுரீதியான தாவர வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு திட்டமிட்டு நிறந்தீட்டுக. (தாளுக்குப் பொருந்தும் வகையில் அளவிடைக்கு வரைக.)

## பகுதி 'இ' - கிறபிக் சித்திரம்

8. இலங்கையில் யானைகளைப் பாதுகாக்கும் இயக்கமொன்றிற்குப் பொருத்தமான **சின்னம்** (Logo) ஒன்றைத் திட்டமிட்டு நிறந்தீட்டுக. (வடிவத்தைப் பொருத்தமான விதத்தில் 6" × 6" அளவினை விடப் பெரிதாக வரைக.)
9. உள்ளூர் தேயிலையை சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்வதற்குப் பொருத்தமான **பொதியிடு உறையொன்றை** இருபரிமாண அல்லது முப்பரிமாணமாகத் திட்டமிட்டு நிறந்தீட்டுக.
10. நீர்வெறுப்பு (விசர்நாய்க்கடி) நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவது தொடர்பாக விழிப்புணர்வூட்டுவதற்குப் பொருத்தமான **சுவரொட்டியொன்றைத்** திட்டமிட்டு நிறந்தீட்டுக.

✳ ✳ ✳

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki
32569



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**43 | I**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
**General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)**

## චිත්‍ර I / சித்திரம் I / Art I

- ප්‍රශ්න අංක **36** සිට **40** දක්වා ප්‍රශ්න සඳහා පිළිතුරු සැපයීමට පහත සිතුවම භාවිත කරන්න.

  வினா இலக்கம் **36** தொடக்கம் **40** வரையிலான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள உருவப்படத்தினை பயன்படுத்துக.

  Use the following painting to answer the questions from No. **36** to **40**.



* * *